நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026-** ஆம் ஆண்டு ஜீலை மாதம் **30-**ஆம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்**.189/2010**

**CNR.No.TNMD16-000025-2010**

**...**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>மேலூர் காவல்நிலையம்<br>குற்ற எண்.218/2010 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) காட்டுராஜா, (35/2026)<br>த/பெ.படியான் (எ) செத்து பொளச்சான்,<br>அரிட்டாபட்டி, மேலூர்.<br><br>2) ராஜேஷ் (இறப்பு)<br><br>3) முருகன், (வயது 40/2026)<br>த/பெ.பஞ்சாட்சரம்,<br>மருதூர், மேலூர்.<br><br>4) வீரணன் (எ) கவாஸ்கர், (வயது 35/2026)<br>த/பெ.வீரணன் (எ) மீன் கண்ணன்,<br>அரிட்டாபட்டி, மேலூர்.<br><br>**(**இந்த வழக்கில் **2-**ம் எதிரி ராஜேஷ் என்பவர் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே இறந்துவிட்டார்**.** அதனால் அவரை பொறுத்து வழக்கு அற்றுப்போக **(Charge abated)** உத்தரவிடப்படுகிறது**.)** |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 392-ன் கீழ் |
| குற்றம் வனையப்பட்டது | : | 1, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 392-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | A1, A3, A4 : 17.03.2010 |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 27.07.2010 |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:25 +0530

| | |
|---|---|
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு : | 1) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.358 of 2017 =Allowed.<br><br>2) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.4335 of 2024 =Allowed.<br><br>3) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.6845 of 2018 =Allowed.<br><br>4) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.3370 of 2018 =Allowed.<br><br>5) U/s.70(2) Warrant Recall in Crl.M.P.No.394 of 2017 =Allowed. |

முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் :

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 05.07.2016 | 30.03.2026 |
| PW2 | 05.07.2016 | Nil |
| PW3 | 21.04.2017 | 21.04.2017 |
| PW4 | 21.04.2017 | 21.04.2017 |
| PW5 | 20.08.2018 | 20.08.2018 |
| PW6 | 20.08.2018 | 06.04.2026 |
| PW7 | 20.08.2018 | Nil |
| PW8 | 23.10.2018 | 23.10.2018 |
| PW9 | 15.11.2021 | 07.05.2026 |

| | |
|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் : | 06.07.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் : | A2: 16.08.2016 to 23.01.2017<br>A1: 20.11.2018 to 20.12.2018<br>A1 & A3 : 21.06.2018 to 25.06.2018<br>A3: 15.12.2016 to 24.01.2017 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் : | Nil |
| தீர்மானம் : | 1, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 392-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:31 +0530

| | |
|---|---|
| தீர்ப்பு | : முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, 1, 3, 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 392-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இந்நீதிமன்ற RPR No.84/2010-ல் உள்ள வழக்கு சொத்தை அதன் உரிமையாளரான இவ்வழக்கின் புகார்தாரர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அந்த வழக்கு சொத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே வைத்துக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் 1, 3, 4 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |

இவ்வழக்கானது கடந்த 30.08.2010-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.07.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேந்தர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை :-</u>

எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 392-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**<u>1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :</u>**

கடந்த 14.03.2010-ம் தேதி இரவு 21.00 மணிக்கு மேலூர், நொண்டிகோவில்பட்டியில் உள்ள வாதி வீட்டின் மேல் மாடியில் தூங்கிக்கொண்டு இருந்தபோது வீட்டின் கீழ்பகுதியில் வயதான தகப்பனார் முன்பகுதியிலும் தாயார் நடுப்பகுதியிலும் படுத்து இருந்தபோது 1 முதல் 3 எதிரிகள் ஆள்பார்த்தும், 4-ம் எதிரி வீட்டிற்கள் நுழைந்து வாதியின் வயதான அம்மா



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:36 +0530

கழுத்தில் கிடந்த 4 பவுன் தங்கச்செயின் மதிப்பு ரூ.28 ஆயிரம் பெறுமானதை அத்துக்கொண்டு சென்ற குற்றம் புரிந்துள்ளார்கள் என்று மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.189/2010 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழான எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 392-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 22.02.2016 அன்று எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் மற்றும் சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.4-ன் மூலம் அ.சா.ஆ2-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.5-ம், அ.சா.9-ன் மூலம் அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் :-**

**4.1)** அ.சா.1 தமிழ்வாணன் தனது சாட்சியத்தில் தான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன் என்றும், விவசாய வேலை செய்கிறேன் என்றும், சாட்சி குருவம்மாள் தன் தாயார் என்றும், கடந்த 14.03.10-ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு தான் நொண்டிக்கோவில்பட்டியிலுள்ள தன் வீட்டில் மாடியில் தானும் தன் மனைவியும் படுத்திருந்தோம் என்றும், அப்பொழுது வீட்டின் கீழ்தளத்தில் இருந்து தன்னுடைய அம்மாவின் சத்தம் நகையை அத்துக்கொண்டு போகிறார்கள் என்று சத்தம் கேட்டது என்றும், உடனே தானும் தன் மனைவியும் கீழே வந்து பார்த்தபொழுது தன் அம்மா ஒரு நபர் வீட்டிற்குள் வந்து தன் கழுத்தில் அணிந்திருந்த தாலிச்செயின் அத்துக்கொண்டு சென்றதாக சொன்னார் என்றும், தன் அப்பாவும் தன் அம்மா அருகில் இருந்தார் என்றும், வழக்கமாக தன்னுடைய அப்பா முன் ரூமிலும், தன் அம்மா அதற்கு அருகில் உள்ள 2வது ரூமிலும் தூங்குவார்கள்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:42 +0530

என்றும், தன் அப்பா அடிக்கடி சிறுநீர் கழிக்க செல்வதால் வீட்டின் ஒரு கதவை திறந்து வைத்துவிட்டு தூங்குவார்கள் என்றும், மேலும் தன் அம்மாவின் சத்தம்கேட்டு வீட்டின் அருகிலிருந்தவர்களும் வந்தார்கள் என்றும், உடனே தாங்கள் அனைவரும் திருடியவரை தேடிப்பார்த்தோம் ஆனால் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும், அதன்பிறகு மேலூர் காவல் நிலையம் வந்து அன்று இரவு 10.45 மணிக்கு நான் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தேன் என்றும், திருடுபோன தன் அம்மாவின் தாலிச்செயின் 4 பவுன் என்றும், அதன் அப்போதைய மதிப்பு ரூபாய் 30 ஆயிரம் என்றும், பின்பு 3 நாட்கள் கழித்து 17ம் தேதி மேலூர் காவல் நிலை போலீசார் தன்னை அழைத்து நகையை கண்டுபிடித்திருப்பதாகவும் அது தங்கள் நகைதானா என்று அடையாளம் காட்டும்படியும் சொன்னார்கள் என்றும், அதன்பேரில் தான் மேலூர் காவல் நிலையம் சென்று தன் தாயாரின் தாலிச்செயின் அடையாளம் காட்டினேன் என்றும், மேலும் போலீசார் அந்த செயினை திருடியவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 4 நபர்கள் தான் என்று காவல் நிலையத்திலிருந்த இவர்களை காண்பித்து போலீசார் சொன்னார்கள் என்றும், பின்பு தன்னுடைய தாயார் நீதிமன்றத்தில் மனுச்செய்து அந்த தாலிச்செயினை திரும்பி பெற்றுக்கொண்டார் என்றும், அந்த தாலிச்செயின் தற்போது தன் வீட்டில் உள்ளது என்றும், அதைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தாலி செயின்தான் அந்த தாலி செயின் ஆகும் என்றும், அந்த புகைப்படம் அ.சா.பொ.1 என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 சுதா தனது சாட்சியத்தில் தான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன் என்றும், விவசாய வேலை செய்கிறேன் என்றும், சாட்சி குருவம்மாள் தன் மாமியார் என்றும், கடந்த 14.03.10-ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு தான் நொண்டிக்கோவில்பட்டியிலுள்ள தன் வீட்டில் மாடியில் தானும் தன் கணவரும் படுத்திருந்தோம் என்றும், அப்பொழுது தன் மாமியார் தன் கணவரின் பெயரைச் சொல்லி கூப்பிட்டு யாரோ ஒருவன் செயினை அத்துக்கொண்டு ஓடுவதாக கத்தினார் என்றும், உடனே தாங்கள் அனைவரும் திருடியவரை தேடிப்பார்த்தோம் ஆனால் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும், அதன்பிறகு தன் கணவர் மேலூர் காவல் நிலையம் வந்து அன்று இரவு 10.45 மணிக்கு புகார் கொடுத்தார் என்றும், திருடுபோன தன் மாமியாரின் தாலிச்செயின் 4 பவுன் என்றும், பின்பு 3 நாட்கள் மேலூர் காவல் நிலைய போலீசார் தன் கணவரை அழைத்து நகையை கண்டுபிடித்திருப்பதாகவும் அது தங்கள் நகைதானா என்று அடையாளம் காட்டும்படியும் சொன்னார்கள் என்றும், அதன்பேரில் தன் கணவன்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:47 +0530

மேலூர் காவல் நிலையம் சென்று தன் தாயாரின் தாலிச்செயின் அடையாளம் காட்டினார் என்றும், மேலும் போலீசார் அந்த செயினை திருடியவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 4 நபர்கள் தான் என்று காவல் நிலையத்திலிருந்த அவர்களை காண்பித்து போலீசார் சொன்னார்கள் என்றும், பின்பு தன்னுடைய மாமியார் நீதிமன்றத்தில் மனுச்செய்து அந்த தாலிச்செயினை திரும்பி பெற்றுக்கொண்டார் என்றும், அந்த தாலிச்செயின் தற்போது தன் வீட்டில் உள்ளது என்றும், அதைப்பார்த்தால் தன்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 சுப்பையா தனது சாட்சியத்தில் தான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன் என்றும், தான் டெய்லராக இருக்கிறேன் என்றும், கடந்த 2010-ம் வருடம் 03-வது மாதம் ஒருநாள் இரவு சுமார் 09 மணியளவில் எனது வீட்டிலிருந்து 03 அல்லது 04 வீடுகள் தள்ளி உள்ள வீட்டில் வசிக்கும் தனது பெரியப்பா காஞ்சிவனம் 'ஓடி வாங்கப்பா சங்கிலியை அத்துக்கொண்டு ஓடுராங்க' என்று சத்தம்போட்டார் என்றும், உடனே தானும், அருகிலிருந்தவர்களும் ஓடிச்சென்று பார்த்தேம் என்றும், திருடர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், இரவு சுமார் 09 மணியளவில் ஒருநபர் வீட்டிற்குள் வந்து உறங்கிக்கொண்டிருந்த தனது பெரியம்மாவின் 04 பவுன் செயின் அத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும் தனது பெரியப்பாவும், பெரியம்மாவும் தன்னிடம் சொன்னார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 பாரதி தனது சாட்சியத்தில் தான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன் என்றும், தான் விவசாயம் மற்றும் டீ கடை தொழில் செய்கிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 14.03.2010-ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் எனது வீட்டிலிருந்தபொழுது அருகிலுள்ள தனது அப்பா காஞ்சிவனத்தின் வீட்டில் தன் அம்மாவின் செயினை அத்துச்சென்றது சம்மந்தமாக விசாரிக்க வந்த மேலூர் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து அது பற்றிய விபரத்தை மற்றொரு தாளில் எழுதி தன்னிடமும், தன் தம்பி மகன் நவீன்குமாரிடமும் சாட்சிகளாக கையொப்பம் வாங்கினார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 நவீன்குமார் தனது சாட்சியத்தில் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், 14.03.2010-ம் தேதி இரவு 11.30 மணியளவில் தன் வீட்டு முன்பாக போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:52 +0530

வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், பார்வை மகஜரில் தானும், தனது பெரியப்பா பாரதி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6)** அ.சா.6 சேட்பாபு தனது சாட்சியத்தில் தான் மேலூரில் வசிக்கிறேன். தான் கிராம நிர்வாக அலுவராக இருந்து ஓய்வில் இருக்கிறேன். 16.03.2010-ம் தேதி மாலை சுமார் 4.00 அல்லது 4.30 மணியளவில் மேலூர் காவல் நிலையத்திலிருந்து அழைத்ததன் பேரில் காவல் நிலையம் சென்றேன் என்றும், அங்கு திருட்டு வழக்கு சம்மதமாக காட்டு ராஜா மற்றும் 3 நபர்களை காவல் ஆய்வளார் விசாரணை செய்த போது தானும் தலையாரியும் உடன் இருந்தோம் என்றும், ஒரு மூதாட்டியிடம் 4 பவுன் சங்கிலியை பறித்ததாக விசாரணையில் தெரிய வந்தது எனவும், எதிரி காட்டுராஜா என்பவர் அரிட்டாபட்டியில் உள்ள தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த 4 பவுன் செயினை தன்னுடன் வந்தால் எடுத்து தருவதாக கூறினார் என்றும், இரவு 1 மணியளவில் 2 மணிக்குள் காவல் ஆய்வாளருடன் தான் அரிட்டாப்பட்டி சென்று எதிரி காட்டுராஜா எடுத்துக்கொடுத்த 4 பவுன் செயினை காவல் ஆய்வாளர் பெற்று கொண்டார் என்றும், வாக்குமூலத்தில் தான் கையெழுத்து செய்தார் என்றும், அத்தாட்சி மற்றும் நான்கு ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும், எதிரி காட்டுராஜா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 ஆறுமுகம் தனது சாட்சியத்தில் தான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன். தான் கிராம உதவியாளராக பணிபுரிகிறார் என்றும், 16.03.2010-ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் மேலூர் காவல் நிலையத்திலிருந்து அழைத்ததன் பேரில் தானும் கிராம நிர்வாக அலுவலரும் காவல் நிலையம் சென்றோம் என்றும், அங்கு திருட்டு வழக்கு சம்மதமாக காட்டு ராஜா மற்றும் 3 நபர்களை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்கள் என்றும், பின்னர் போலீசாருடன் அரிட்டாப்பட்டி சென்று எதிரி காட்டுராஜா என்பவர் போலீசாருடன் ஒப்படைத்த 4 பவுன் செயினை போலீசார் பெற்றுக் கொண்டார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2-வது தன்னுடையது தான் என்றும், அத்தாட்சியில் உள்ள 2-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.8)** அ.சா.8 வனமூர்த்தி தனது சாட்சியத்தில் தான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றும், கடந்த 14.03.2010-ம் தேதி நான் மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக தான் பணியிலிருக்கும் போது தமிழ்வாணன் என்பவர்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:56:57 +0530

ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.218/10 இ.த.ச பிரிவுகள் 392-ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் என்றும், அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி அவர்கள் பார்வைக்கு வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.9)** அ.சா.9 பாலாஜி தனது சாட்சியத்தில் தான் தற்போது விருதுநகர் மாவட்டம் வைத்திராயிருப்பு வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன் என்றும், கடந்த 14.03.10-ம் தேதி மேலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றும், அப்பொழுது மேலூர் காவல் நிலைய குற்றஎண். 218/10 இ.த.ச பிரிவு 392-ன் படி சார்பு ஆய்வாளர் வனமூர்த்தி என்பவர் பதிவு செய்த வழக்கு கோப்பை பார்வையிட்டு சம்பவ இடத்திற்கு அன்றையதினமே சென்று சாட்சிகள் பாரதி மற்றும் நவீன்குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அ.சா.8-ன் சாட்சியத்தில் புகார் அ.சா.ஆ.5 ஆக தவறுதலாக மீண்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது நீதிமன்ற உத்தரவின்படி நீக்கம் செய்யப்பட்டு அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக மாற்றம் செய்யப்படுகிறது என்றும், அந்த வரைபடம் அ.சா.ஆ.6 என்றும், பின்னர் சம்பவ சாட்சிகளான தமிழ்வாணன், குருவம்மாள், காஞ்சிவனம், சுதா, பாண்டி, சுப்பையா, பாரதி மற்றும் நவீன்குமார் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தகவலின்பேரில் 16.03.10ம் தேதி 16 மணிக்கு மேலூர் காவல் நிலைய குற்ற எண். 8-10 பிரிவு 392 இதச வழக்கு சம்மந்தமாக அந்நிய சந்தேக நபர்களை கண்காணித்துக்கொண்டு மதுரை நான்குவழிச்சாலை தெற்குப்பட்டி பைபாஸ் சாலையில் வாகனத் தணிக்கை செய்துகொண்டிருந்தபோது சாலையில் கிழக்கேயிருந்து மேற்கு முகமாக டி.என்.59 டபுள்யு 6760 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிலண்டர் மற்றும் டி.என்.58 ஜெ 8870 என்ற பதிவெண்கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை தடுத்து நிறுத்த நிறுத்துவதுபோல் நிறுத்தி தப்ப முயன்றவர்களை வளைத்து பிடித்து விசாரிக்க பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த காட்டுராஜா, ராஜேஷ், முருகன், வீரணன் என்ற கவாஸ்கர் முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறியும் இறுதியாக உண்மையான விலாசத்தை கூறியவர்களை எனது அழைப்பின்பேரில் வந்த சாட்சிகள் சேட்பாபு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் வைத்து விசாரித்தபோது எவ்வித துன்புறுத்தலோ அச்சுறுத்தலோ இன்றி அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றையதினம் 16.30



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:02 +0530

மணிக்கு எதிரி காட்டுராஜா என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன் தொடர்ச்சியாக இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட குருவம்மாள் என்ற அம்மாவிடமிருந்து பறித்த 4 பவுன் தங்க செயினை மறைத்து வைத்திருந்ததை 01.45 மணிக்கு எடுத்து ஆஜர் செய்தார் அதை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றையதினம் 18.30 மணிக்கு ராஜேஷ் என்பவர் தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.7 என்றும், அதன் தொடர்ச்சியாக ராஜேஷ் என்பவர் அரிட்டாபட்டியில்அவரது வீட்டிலிருந்து ஆஜர் செய்த வேறு வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தான 17.03.10ம் தேதி 01 மணிக்கு இரண்டரைபவுன் செயினை அறுந்துபோன நிலையில் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அதே தேதியில் அதே சாட்சிகள் முன்னிலையில் 20.30 மணிக்கு முருகன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.8 என்றும், பின்னர் முருகன் ஆஜர் செய்த வேறு வழக்கு சம்மந்தமான டி.என்.58 ஜெ 8870 என்ற பதிவெண்கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், 22.30 மணிக்கு வீரணன் என்ற கவாஸ்கர் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.9 என்றும், பின்னர் எதிரிகளையும் வழக்கின் சொத்துக்களையும் நிலையம் கொண்டுவந்து எதிரிகளையும் வழக்கு சொத்துக்களையும் தக்க வழிக்காவல் மூலம், படிவம் 91 மூலமும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.10 என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்ப ஆய்வாளர் திரு.வனமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கில் எதிரிகள் மீது வழக்கு விசாரணை முடித்து 05.04.10ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)(ஆ)-**ன் கீழான விசாரணை

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 1, 3 மற்றும் 4 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார்கள். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 1, 3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.


THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:07 +0530

**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 1, 3 மற்றும் 4 எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், 1, 3 மற்றும் 4 எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 1, 3 மற்றும் 4 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7) 1, 3** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு:

1, 3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 1, 3 மற்றும் 4 எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 1, 3 மற்றும் 4 எதிரிகளுக்கு வழங்கி 1, 3 மற்றும் 4 எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8)** தீர்வு **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 14.03.2010-ம் தேதி இரவு 21.00 மணிக்கு மேலூர், நொண்டிகோவில்பட்டியில் உள்ள வாதி வீட்டின் மேல் மாடியில் தூங்கிக்கொண்டு இருந்தபோது வீட்டின் கீழ்பகுதியில் வயதான தகப்பனார் முன்பகுதியிலும் தாயார் நடுப்பகுதியிலும் படுத்து இருந்தபோது 1 முதல் 3 எதிரிகள் ஆள்பார்த்தும், 4-ம் எதிரி வீட்டிற்குள் நுழைந்து வாதியின் வயதான அம்மா கழுத்தில் கிடந்த 4 பவுன் தங்கச்செயின் மதிப்பு ரூ.28 ஆயிரம் பெறுமானதை அத்துக்கொண்டு சென்ற குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 தமிழ்வாணன் தனது சாட்சியத்தில் தான் நொண்டிக்கோவில்பட்டியில் வசிக்கிறேன் என்றும், விவசாய வேலை செய்கிறேன் என்றும், சாட்சி குருவம்மாள் தன் தாயார் என்றும், கடந்த 14.03.10-ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு தான் நொண்டிக்கோவில்பட்டியிலுள்ள தன் வீட்டில் மாடியில் தானும் தன் மனைவியும் படுத்திருந்தோம் என்றும், அப்பொழுது வீட்டின் கீழ்தளத்தில் இருந்து தன்னுடைய அம்மாவின் சத்தம் நகையை அத்துக்கொண்டு போகிறார்கள் என்று சத்தம் கேட்டது என்றும், உடனே



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:12 +0530

தானும் தன் மனைவியும் கீழே வந்து பார்த்தபொழுது தன் அம்மா ஒரு நபர் வீட்டிற்குள் வந்து தன் கழுத்தில் அணிந்திருந்த தாலிச்செயின் அத்துக்கொண்டு சென்றதாக சொன்னார் என்றும், தன் அப்பாவும் தன் அம்மா அருகில் இருந்தார் என்றும், வழக்கமாக தன்னுடைய அப்பா முன் ரூமிலும், தன் அம்மா அதற்கு அருகில் உள்ள 2வது ரூமிலும் தூங்குவார்கள் என்றும், தன் அப்பா அடிக்கடி சிறுநீர் கழிக்க செல்வதால் வீட்டின் ஒரு கதவை திறந்து வைத்துவிட்டு தூங்குவார்கள் என்றும், மேலும் தன் அம்மாவின் சத்தம்கேட்டு வீட்டின் அருகிலிருந்தவர்களும் வந்தார்கள் என்றும், உடனே தாங்கள் அனைவரும் திருடியவரை தேடிப்பார்த்தோம் ஆனால் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும், அதன்பிறகு மேலூர் காவல் நிலையம் வந்து அன்று இரவு 10.45 மணிக்கு நான் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தேன் என்றும், திருடுபோன தன் அம்மாவின் தாலிச்செயின் 4 பவுன் என்றும், அதன் அப்போதைய மதிப்பு ரூபாய் 30 ஆயிரம் என்றும், பின்பு 3 நாட்கள் கழித்து 17ம் தேதி மேலூர் காவல் நிலை போலீசார் தன்னை அழைத்து நகையை கண்டுபிடித்திருப்பதாகவும் அது தங்கள் நகைதானா என்று அடையாளம் காட்டும்படியும் சொன்னார்கள் என்றும், அதன்பேரில் தான் மேலூர் காவல் நிலையம் சென்று தன் தாயாரின் தாலிச்செயின் அடையாளம் காட்டினேன் என்றும், மேலும் போலீசார் அந்த செயினை திருடியவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 4 நபர்கள் தான் என்று காவல் நிலையத்திலிருந்த இவர்களை காண்பித்து போலீசார் சொன்னார்கள் என்றும், பின்பு தன்னுடைய தாயார் நீதிமன்றத்தில் மனுச்செய்து அந்த தாலிச்செயினை திரும்பி பெற்றுக்கொண்டார் என்றும், அந்த தாலிச்செயின் தற்போது தன் வீட்டில் உள்ளது என்றும், அதைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தாலி செயின்தான் அந்த தாலி செயின் ஆகும் என்றும், அந்த புகைப்படம் அ.சா.பொ.1 என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் “இந்த வழக்கை என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரிகளை கண்டறிவதற்கு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தினார்களா என்றால் இல்லை. நான் முதல்விசாரணை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்தபோது போலீசார் இவர்கள் தான் எனது வீட்டில் திருடியவர்கள் என்று கூறினார்கள்.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே அ.சா.1 எதிரிகள் அவரது வீட்டில் நகையை திருடிய போது அவர் அதை பார்க்கவில்லை என்றும், எதிரிகள் தான் அந்த நகையை திருடினார்கள் என்று நிரூபிக்கவில்லை. மேலும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் தனது தாயார் அணிந்திருந்த 4 பவுன்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:18 +0530

தங்கச்செயினை அறுத்து சென்றுவிட்டதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் அறுபடவில்லை என்றால் சரிதான். நான் எனது புகார் மனுவில் செயினை அறுத்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.'' என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 ஆன புகார்தாரரின் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இவ்வழக்கு சொத்தானது அ.சா.1-ன் தாயாரிடமிருந்து திருடப்பட்ட நகை தானா என்று சந்தேகம் எழுகிறது.

**12)** அ.சா.2, அ.சா.3 ஆகிய சாட்சிகள் சம்பவம் நடந்த பின்னர் எதிரிகளை மற்றும் நகையை தேடியதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்கள் இவ்வழக்கின் எதிரிகள் தான் அ.சா.1-ன் தாயாரான குருவம்மாளிடமிருந்து அறுத்து சென்றதாகவும், அதை அவர்கள் பார்த்ததாகவும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் அ.சா.1-ன் தாயாரான குருவம்மாள் வழக்கு நிலுவையில் இருந்தபோதே இறந்துவிட்டதால் அவரை அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை.

**13)** மேலும் அ.சா.7 தனது சாட்சியத்தில் கடந்த 16.03.2010-ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் மேலூர் காவல் நிலையத்திலிருந்து அழைத்ததன் பேரில் தானும் கிராம நிர்வாக அலுவலரும் காவல் நிலையம் சென்றோம் என்றும், அங்கு திருட்டு வழக்கு சம்மதமாக காட்டு ராஜா மற்றும் 3 நபர்களை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்கள் என்றும், பின்னர் போலீசாருடன் அரிட்டாப்பட்டி சென்று எதிரி காட்டுராஜா என்பவர் போலீசாருடன் ஒப்படைத்த 4 பவுன் செயினை போலீசார் பெற்றுக் கொண்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தின் அடிப்படையில் எதிரி காட்டுராஜா, 4 பவுன் செயினை எடுத்து போலீசாரிடம் கொடுத்ததாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அது என்ன வகையான செயின் என்றும், மற்ற எதிரிகள் எவ்வாறு குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

**14)** மேலும் அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 16.03.2010-ம் தேதி மாலை சுமார் 4.00 அல்லது 4.30 மணியளவில் மேலூர் காவல் நிலையத்திலிருந்து அழைத்ததன் பேரில் காவல் நிலையம் சென்றேன் என்றும், அங்கு திருட்டு வழக்கு சம்மதமாக காட்டு ராஜா மற்றும் 3 நபர்களை காவல் ஆய்வளார் விசாரணை செய்த போது தானும் தலையாரியும் உடன் இருந்தோம் என்றும், ஒரு மூதாட்டியிடம் 4 பவுன் சங்கிலியை பறித்ததாக விசாரணையில் தெரிய வந்தது எனவும், எதிரி காட்டுராஜா என்பவர் அரிட்டாபட்டியில் உள்ள தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த 4 பவுன் செயினை தன்னுடன் வந்தால் எடுத்து தருவதாக கூறினார் என்றும்,



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:23 +0530

இரவு 1 மணியளவில் 2 மணிக்குள் காவல் ஆய்வாளருடன் தான் அரிட்டாப்பட்டி சென்று எதிரி காட்டுராஜா எடுத்துக்கொடுத்த 4 பவுன் செயினை காவல் ஆய்வாளர் பெற்று கொண்டார் என்றும், வாக்குமூலத்தில் தான் கையெழுத்து செய்தார் என்றும், அத்தாட்சி மற்றும் நான்கு ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** அ.சா.6-ன் சாட்சியத்தின் மூலம் காட்டுராஜா மற்றும் 3 நபர்கள் காவல்நிலையத்தில் இருந்ததாகவும், காட்டுராஜா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அந்த மூன்று நபர்கள் யார் என்று அ.சா.6 நீதிமன்றத்தில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "காவல் ஆய்வாளர் அரிட்டாபட்டி கிராமத்தில் காட்டுராஜா வீட்டிலிருந்து 4 பவுன் தங்க சங்கிலி போல் இருந்த நகையை இரவு 1 மணியிலிருந்து 2 மணிக்குள் எனது முன்னிலையில் கைப்பற்றினார்கள்". என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தின் அடிப்படையில் இவ்வழக்கு சொத்து தான் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்று அரசு தரப்பில் உறுதி செய்யவில்லை. மேலும் மற்ற எதிரிகள் யார் என்றும், அவர்கள் எவ்வாறு குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை.

**16)** மேலும் மாண்புமிகு கல்கத்தா உயர்நீதிமன்றம் Parikshit kander @ Kandar -vs- State of West Bengal என்ற வழக்கில் "Evidence of witness who have sought to prove the confession or inconsistant and contratictory to one another. Witnesses need not re produce the exact words of the confessor to prove a confession. But if the version confession of the witness with regard to the contents of the confession or the contratictory to one another, it would be difficult to persuade oneself that the confession has been proved”.

**17)** மேற்கண்ட முன் தீர்ப்பின் நெறிமுறைகளை பின்பற்றுகையில் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் முன்னுக்குப்பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**18)** மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், Nilesh Baburao Gitte -vs- State of Maharastra என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

This case rests entirelv on circumstantial evidence. This Court has, time and again, reiterated the five golden principles to be kept in mind while appreciating a case based on circumstantial evidence. In Sharad Birdhichand Sarda vs. State of Maharashtra, (1984) 4



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:27 +0530

SCC 116. this Court held as under:-

"153. A close analysis of this decision would show that the following conditions must be fulfilled before a case against an accused can be said to be fully established:

"(1) the circumstances from which the conclusion of guilt is to be drawn should be fully established.

It may be noted here that this Court indicated that the circumstances concerned "must or should" and not "may be" established. There is not only a grammatical but a legal distinction between "may be proved" and "must be or should be proved" as was held by this Court in Shivaji Sahabrao Bobade v. State of Maharashtra [(1973) 2 SCC 793] where the observations were made:

"Certainly, it is a primary principle that the accused must be and not merely may be guilty before a court can convict and the mental distance between may be' and 'must be' is long and divides vague conjectures from sure conclusions.'

(2) the facts so established should be consistent only with the hypothesis of the guilt of the accused, that is to say, they should not be explainable on any other hypothesis except that the accused is guilty,

(3) the circumstances should be of a conclusive nature and tendency, (4) they should exclude every possible hypothesis except the one to be proved, and (5) here must be a chain of evidence so complete as not to leave any reasonable ground for the conclusion consistent with the innocence of the accused and must show that in all human probability the act must have been done by the accused.”

**19)** மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Shailendra Rajdev Pasvan and others -vs- State of Gujarat and others என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“Thus, the entire case of the prosecution is based on the circumstantial evidence. It is well settled that in a case which rests on circumstantial evidence, law postulates two fold requirements:

i) every link in chain of the circumstance necessary to establish the guilt of the accused must be established by the prosecution beyond reasonable doubt,

ii) All the circumstances must be consistent pointing only towards the guilt of the accused”.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:31 +0530

**20)** மேற்படி முன்தீர்ப்புகளின் அடிப்படையில் இவ்வழக்கில் எதிரிகள் தான் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதை அரசு தரப்பில் சூழ்நிலை சாட்சிகள் மட்டும் உள்ள நிலையில் அந்த சூழ்நிலை சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் முன்னுக்குப்பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். அதனால் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை சங்கிலி தொடர்பின்படி அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**21)** மேற்படி அ.சா.1-ன் சாட்சியத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தானது கொள்ளையடிக்கப்பட்டது என்பது மட்டுமே தெரியவந்தது என்பதை தவிர, அதனை எதிரிகள் கொள்ளையடித்து சென்றார்கள் என்பதை குறித்தும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தானது எதிரிகள் அ.சா.1-ன் தாயாரிடமிருந்து அறுத்து சென்ற செயின் தான் என்று எந்த சாட்சியமும் இடம்பெறவில்லை. மேலும் இது போன்ற திருட்டு வழக்குகளில் நேரடி சாட்சிகள் இல்லாத போது சூழ்நிலை சாட்சிகளும், ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளும் தான் வழக்கிற்கு வலு சேர்ப்பதாகும். ஆனால் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முன்னுக்குப்பின் முரணாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் வழக்கு சொத்துக்களை 1, 3, 4 எதிரிகள் கொள்ளையடித்தார்கள் என்பதற்கும், அவர்கள் எவ்வாறு வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்றும், அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே வழக்கு சொத்தை 1, 3, 4 எதிரிகள் தான் கொள்ளையடித்தார்கள் என்று எந்த சாட்சிய சான்றாவணங்களும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**22)** முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, 1, 3, 4 எதிரிகள் இ.த.ச பிரிவு 392-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**23)** இந்நீதிமன்ற RPR No.84/2010-ல் உள்ள வழக்கு சொத்தை அதன் உரிமையாளரான இவ்வழக்கின் புகார்தாரர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அந்த வழக்கு சொத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே வைத்துக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**24)** மேலும் 1, 3, 4 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:36 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 30 -ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:42 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம்/சாட்சியின் தன்மை |
|---|---|---|---|
| அ.சா.1 | 05.07.2016 | தமிழ்வாணன் | புகார்தாரர் |
| அ.சா.2 | 05.07.2016 | சுதா | சாட்சி-1 உடன் சேர்ந்து புகார் கொடுக்க சென்றது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். |
| அ.சா.3 | 21.04.2017 | சுப்பையா | சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார். |
| அ.சா.4 | 21.04.2017 | பாரதி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | 20.08.2018 | நவீன்குமார் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | 20.08.2018 | சேட்பாபு | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| அ.சா.7 | 20.08.2018 | ஆறுமுகம் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி |
| அ.சா.8 | 23.10.2018 | வனமூர்த்தி | முதல்நிலை புலன்விசாரணை அதிகாரி |
| அ.சா.9 | 15.11.2021 | பாலாஜி | புலன்விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | நிரூபிக்கப்பட்டது/ சான்றளிக்கப்பட்டது | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | அ.சா.6 | எதிரி காட்டுராஜா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.4 | அ.சா.6 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.5 | அ.சா.9 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | அ.சா.9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.9 | ராஜேஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.8 | அ.சா.9 | முருகன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.9 | அ.சா.9 | வீரணன் (எ) கவாஸ்கர் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.10 | அ.சா.9 | படிவம் -91 |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:</u>

1) அ.சா.பொ.1 – வழக்கு சொத்தை காட்டக்கூடிய புகைப்படம்

<u>**1, 3** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> - இல்லை

<u>குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், 1, 3 மற்றும் 4 எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.30 06:57:48 +0530